

# வசந்தம்

சிற்றிதழ்

கிருஷ்ணார்த்தி ஃபவுண்டேஷன் இந்தியா | அக்டோபர் 2004 | இதழ் 17

## தனி நபரும் சகமும்

ஜே. கிருஷ்ணார்த்தி

நாங்கள் நெரிசலான ஒரு தெருவழியே சென்று கொண்டிருந்தோம். சாலை ஓரத்து நடைபாதைகளில் மக்கள் நிரம்பி இருந்தனர். பஸ்கள், கார்களிலிருந்து வெளியாகும் புகையின் வாடை நாசியை அடைத்தது. கடைகளில் பலவிதமான விலை உயர்ந்த பொருட்களும், மலிவான பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. வானம், மங்கிய வெள்ளியாய் இருந்தது. சந்தடி மிகுந்த சாலையிலிருந்து பூங்காவிற்குள் வந்ததும் இனிமையாக இருந்தது. பூங்காவிற்குள் வெகுதூரம் சென்று அங்கே அமர்ந்தோம்.

அரசு இராணுவமயமாக்குதல் லம், சட்டம் இயற்றுதல் லம் எங்கு பார்த்தாலும் தனி நபரை ஆக்கிரமித்துக் கொள்கிறது என்றார் அவர். அத்துடன் இப்பொழுது கடவுள் வழிபாட்டிற்கு பதிலாக அரசாங்கத்தை வழிபடுவது தோன்றியிருக்கிறது என்றார். பெரும்பாலான நாடுகளில் அரசு மக்களின் அந்தரங்க வாழ்க்கையிலும் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. அவர்கள் எதை படிக்கவேண்டும், எதைச் சிந்திக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறார்கள். அரசு அதன் குடிமக்களையே உளவு பார்க்கிறது; கிறிஸ்தவதிருச்சபையின் செயல்பாடுகளைத் தான் எடுத்துக் கொண்டு தனிநபரின் செயல்பாட்டை கவனித்துக்கொண்டே இருக்கிறது. இவ்வாறு அரசாங்கம் ஓர் புதிய சமயமாகி விட்டது! கிறிஸ்தவ திருச்சபையின் அடிமையாக இருந்த மனிதன் இப்பொழுது அரசாங்கத்தின் அடிமையாக இருக்கிறான். முன்பு கல்வி முறையை கிறஸ்தவ திருச்சபை கட்டுப்படுத்தியது; இப்பொழுது அரசு கட்டுப்படுத்துகிறது. இரண்டுமே மனிதனின் விடுதலைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

தனி நபருக்கு சகத்துடன் உள்ள உறவு என்ன? சகம் தனிப்பட்டவருக்காகவே இருக்கிறது என்பது தெளிவான விஷயம். தனி நபர் சகத்திற்காக இல்லை. சகம் தனி நபரின் மேம்பாட்டிற்காகவே இருக்கிறது. சகம் தனிநபருக்கு சுதந்திரம் கொடுக்கவே இருக்கிறது. அப்பொழுதுதான் தனிநபர் மிக உயர்ந்த மெய்யறிவை எழுச்சியுறச் செய்யும் வாய்ப்பை பெறமுடியும். திறனை வளர்ப்பது, விவர அறிவை வளர்ப்பது இந்த மெய்யறிவாகாது. மாறாக மேலோட்டமான மனத்தைச் சாராத சிருஷ்டித்திறன் கொண்ட மெய்ப்பொருளுடன் தொடர்புகொள்வதே இந்த மெய்யறிவாகும். மெய்யறிவு சேமித்ததின் விளைவு அல்ல; சாதனை புரியும் உணர்விலிருந்தும், வெற்றி பெறுதல் என்ற உணர்விலிருந்தும் விடுதலையே இந்த மெய்யறிவாகும். மெய்யறிவு ஜீவனற்று ஜடமாக இருக்கும் ஒன்றல்ல. அதை நகலபடுத்துவதோ நிர்ணயித்திற்குட்படுத்துவதோ முடியாது. ஆகவே அதை கற்றுதரமுடியாது. மெய்யறிவை சுதந்திரத்தில்தான் கண்டுணரமுடியும்.

சகத்தின் அங்கமாக விளங்கும் ஒட்டு மொத்த மனிதர்களின் விருப்பமும் அவர்களுடைய செயலும் தான் சகம். அந்தச் சகம் தனி நபருக்கு இந்தச் சுதந்திரத்தை அளிப்பதில்லை. ஏனெனில் சகம் ஜீவன் இல்லாததால் மாறாமல் நிலைத்து இருக்கிறது. சகம் மனிதனின் வசதிக்காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது. தானே இயங்கும் சக்தி அதனிடம் இல்லை. மனிதர்கள் அவர்களின் மனநிலைக்கேற்ப சகத்தை கைப்பற்றி, வழி நடத்தி, ஒரு வடிவமளித்து கொடுமைக்குள்ளாக்கலாம். ஆனால் சகம் மனிதனை அடக்கி ஆளும் அதிகாரி அல்ல. அது அவனிடம் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். ஆனால் மனிதன் எப்பொழுதுமே அதை உடைத்துவிடுகிறான். மனிதன் தனக்குள் போராட்டத்துடன் வாழ்வதால், சகத்திற்கும், மனிதனுக்கும் இடையில் போராட்டம் உள்ளது. இந்தப் போராட்டம் மாறாது நிலைத்து நிற்கும் ஒன்றுக்கும், செழுமையாக ஜீவனுடன் இருக்கும் ஒன்றுக்கும் இடையே ஏற்படுகிறது. சகம் என்பது மனிதனின் வெளிப்படையான பிரதிபலிப்பாகும். அவனுக்கும் சகத்திற்கும் இடையில் ஏற்படும் போராட்டம் அவனுக்குள் உள்ள போராட்டமே. மிக உயர்ந்த மெய்யறிவு எழுச்சி பெறாதவரை இந்த போராட்டம் உள்ளேயும், வெளியிலும் எப்பொழுதுமே இருந்தே தீரும்.

நாம் சகத்தின் அங்கங்கள்; அதே சமயம் நாம் தனி நபர்கள். நாம் குடிமக்கள், அதே சமயம் மனிதர்கள்; தனிப்பட்ட துக்கத்திலும், சுகத்திலும் ழ்கியிருப்பவர்கள். அமைதி தோன்ற வேண்டுமென்றால் குடிமகனுக்கும் தனி மனிதனுக்கும் இடையில் உள்ள உறவை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரசு நம்மை முற்றிலுமே குடிமக்களாகவே இருப்பதையே விரும்புகிறது. ஆனால் அதுதான் அரசாங்கங்களின் அறிவற்ற செயலாகும். நாமும் மனிதனைக் குடிமகனிடம் ஒப்படைத்துவிட விரும்பலாம்; ஏனெனில் மனிதனாக இருப்பதைவிட குடிமகனாக இருப்பது எளிது.

குறிப்பிட்ட சகத்தின் அமைப்பு முறைக்கேற்ப திறமையாக செயல் படுவதே நல்ல குடிமகனாக இருப்ப தாகும். திறமையும், ஒத்துப்போதலும் குடிமகனிடம் எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் இவை அவனைக் கடுமை யாக்கி, கொடூரமானவனாக மாற்றுகிறது. பின்னர் அவன் மனிதனைக் குடி மகனுக்கு பலிகொடுக்கக் கூடியவனா கிறான். ஒரு நல்ல குடிமகன் நல்ல மனிதனாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் நல்ல மனிதன், ஒரு குறிப்பிட்ட சகத் தையோ நாட்டையோ சாராத சரியான குடிமகனாக இருப்பது உறுதி. அடிப்படையிலேயே அவன் நல்ல மனிதனாக இருப்பதால் அவனுடைய செயல்பாடுகள் சக விரோதமானதாக இருப்பதில்லை; அவன் மற்ற மனிதர்களுக்கு எதிராக செயல்பட மாட்டான். அவன் மற்ற நல்ல மனிதர் களுடன் ஒற்றுமையாக வாழ்வான். அவன் அதிகாரத்துவத்தை நாடுவதில் லை; ஏனெனில் அவனிடம் அதிகாரம் செலுத்தும் உணர்வு முற்றிலுமாக இல்லை. கொடூரமில்லாத திறமை யுடன் செயல்படும் ஆற்றல் உள்ளவனாக அவன் இருப்பான். குடிமகன் மனிதனை பலியிட முயல்கிறான். ஆனால் நிகரற்ற மெய்யறிவைத் தேடுகின்ற மனிதன் குடிமகனின் அறிவற்ற செயல் பாடுகளை இயல்பாகவே விட் டொழித்துவிடுவான். ஆகவே அரசு நல்லமனிதனுக்கு, மெய்யறிவு உள்ள மனிதனுக்கு எதிரானதாக இருக்கும். ஆனால் அப்படிப்பட்ட மனிதன் எல்லா அரசாங்கங்களிலிருந்தும் எல்லா நாடு களிலிருந்தும் விடுபட்டவனாக இருக் கிறான்.

மெய்யறிவு உள்ள மனிதன் ஒரு நல்ல சகத்தை உருவாக்குவான்; ஆனால் ஒரு நல்ல குடிமகன், உயர்ந்த மெய்யறிவுடன் கூடிய மனிதன் வாழ்வதற்கேற்ற சகத்தை உருவாக்க மாட்டான். குடிமகன் அதிகமாக ஆதிக்கம் செலுத்தினால், குடிமகனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள போராட்டம் தவிர்க்க முடியாததாகி விடும். ஆகவே தெரிந்தே மனிதனைப் பொருட்படுத்தாத சகம் அழிந்து போகவேண்டியது தான். மனிதனின் மனவியல் நடைமுறையைப் புரிந்து கொண்டால் தான் குடிமகனுக்கும் மனிதனுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட முடியும். அரசும், இன்றைய சகமும் மனிதனின் அகவாழ்க்கை யைப் பற்றி அக்கறை செலுத்துவ தில்லை. மனிதனின் வெளிப்புற செயல் பாடின் மீதும், குடிமகன் மீதும் தான் அரசு அக்கறை கொண்டுள்ளது. மனி தனின் அக வாழ்க்கையை அது மறுத்து விடக்கூடும். ஆனால் அவன் புறஇயல் மனிதனை வெற்றிகொண்டுவிடுகிறான். அதன் லம் குடிமகனுக்காக தந்திரமாக ஏற்படுத்திய திட்டங்களை அழித்துவிடு கிறான். அரசு எப்பொழுதும் எதிர் காலத்திற்கான பாதுகாப்பை ஏற் படுத்திக்கொண்டு நிகழ்காலத்தை எதிர் காலத்திற்காகப் பலிகொடுக்கிறது. அது எதிர்காலத்தை அதிமுக்கியமாகக் கருது கிறது; நிகழ்காலத்தை அல்ல. ஆனால்

**ஒரு நல்ல குடிமகன் நல்ல மனிதனாக இருக்க வேண்டு மென்ற அவசியமில்லை. ஆனால் நல்ல மனிதன், ஒரு குறிப்பிட்ட சகத்தையோ, நாட்டையோ சாராத சரியான குடிமகனாக இருப்பது உறுதி.**

மெய்யறிவு உள்ள மனிதனுக்கு நிகழ்காலம்தான் அதிமுக்கியமானது; இக்கணமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கணமே முக்கியமானது, நாளை அன்று. ''நாளை'' என்பது மறையும் போதுதான் மனதின் செயல்பாட்டை புரிந்துகொள்ள முடியும். இப்பொழுது நிகழும் கணத்திலே மனதின் செயல் பாட்டை புரிந்துகொள்வதே அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இந்த முழுமையான மாற்றமே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது; குடி மகனுக்கும், மனிதனுக்கும் எப்படி உடன் பாடு ஏற்படுத்துவது என்பது முக்கிய மில்லை. முழுமாற்றம் ஏற்படும்போது மனிதனுக்கும் குடிமகனுக்கும் இடை யில் உள்ள போராட்டம் முடிவுக்கு வருகிறது.

Commentaries on Living
First Series, Chapter 21

- - -

### *அமைதி*

அது சக்தி வாய்ந்த கார். அது சிறப்பான நிலையில் இருந்தது. குன்றின் மீது ஒரு விதத்திணரலுமின்றி எளிதாகச் சென்றது. அதன் வேகப் போக்கு சிறப்பாக இருந்தது. சாலை செங்குத்தாக மலை வெளியைவிட்டு ஆரஞ்சு தோட்டத்திற்கும் உயர்ந்து பரந்து கிடந்த வால்நட் மரங்களுக்கும் இடையில் சென்றது. இரண்டு பக்கங்களிலும் மலைகளின் அடிவாரம் வரை ஆரஞ்சுதோட்டம் நாற்பது மைல் தூரத்திற்கு நீண்டிருந்தது. இப்பொழுது நேராகச் சென்ற சாலை ஓரிரு சிறிய நகரங்களைக் கடந்து பசுமை யான புல்வெளி நிறைந்த கிராமப் புறத்தை சென்றடைந்தது. மறுபடியும் குன்றுகளின் இடையில் வளைந்து சென்று கடைசில் ஒரு பரந்த வெளியை அடைந்தது.

அது மேடுபள்ளமற்ற சாலை; காரின் ஒலி ஒரே சீராக இருந்தது. வாகனப் போக்குவரத்து குறைவாகவே இருந்தது. கிராமப்புறம், அவ்வப்பொழுது கடந்து செல்லும் கார், சாலை வழிகாட்டு குறிகள், தெளிந்த நீலவானம், காரில் அமர்ந்திருக்கும் உடல், இவற்றைப் பற்றிய மிக ஆழமான விழிப்புணர்வு இருந்தது. மனம் சலனமற்று அமைதியில் நிலைத்து நின்றது. அந்த அமைதி களைப்பாலோ, இளைப்பாறுதலாலோ ஏற்பட்டதல்ல. ஆனால் அது விழிப்பு டைய அமைதி. அந்த அமைதி ஒரு மையப்புள்ளியிலிருந்து வந்ததல்ல; அந்த சலனமற்ற நிலையில் காண்பவர் இல்லை; அனுபவிப்பவர் முற்றிலுமாக இல்லை. சாதாரண விஷயங்களைப் பற்றி உரையாடல் இருந்தும் அந்த அமைதியில் சலசலப்பு இல்லை. காரின் வேகத்தில் காற்றின் சீற்ற ஒலியைக் கேட்க முடிந்தது. ஆனாலும் இந்த அமைதி காற்றின் ஒலியிலிருந்தும் காரின் ஒலியிலிருந்தும், பேசிய சொல்லிலிருந்தும் பிரிக்க முடியாததாக இருந்தது. மனத்தில், அதற்குத் தெரிந்த நிலைகளைப் பற்றிய அல்லது முன்னர் ஏற்பட்ட அமைதி நிலைகளைப் பற்றிய ஞாபகம் தோன்ற வில்லை. ''இதுதான் அமைதி'' என்று மனம் சொல்லவில்லை. முன்பு ஏற்பட்ட அனுபவங்களின் அடையாளங்காணலோ, உறுதிப்படுத் துதலோ இருக்கும் வார்த்தை வர்ணனை இதில் இல்லை. வார்த்தை வர்ணனை இல்லாததால் எண்ண ஓட்டம் இல்லை. பதிவு செய்தல் இல்லாததால் எண்ணத்தால் அந்த அமைதியைப் பற்றிச் சொல்லவோ, அந்த அமைதியைப் பற்றி சிந்திக்கவோ முடிய வில்லை. ஏனெனில் 'அமைதி' என்ற சொல் அமைதியாகாது. சொற்கள் இல்லையென்றால் மனத்தால் செயல்பட முடியாது. ஆகவே அனுபவிப்பவர்

மேலும் இன்பமடைவதற்காக அதைச் சேமித்து வைக்க முடியாது. சேமிக்கின்ற செயல்பாடு அங்கு இயங்கவில்லை. அத்துடன் உருவகப்படுத்துதலோ அல்லது தன்மயமாக்குதலோ அங்கு இல்லை. மனத்தின் எண்ண ஓட்டம் முற்றிலுமாக இல்லை.

கார் வீட்டில் வந்து நின்றது. நாய் குரைப்பது, காரிலிருந்து சாமான்களை இறக்குவது அத்துடன் பொதுவாக நிலவிய வெளிப்புற சப்தங்கள் ஆகியவை எந்த விதத்திலும் அந்த அசாதாரணமான அமைதியைக் குலைக்கவில்லை. தொந்தரவு என்பதே அங்கு இல்லை. இந்த பரிபூரண அமைதி நிலை நீடித்தது. பைன் மரங்களுக்கு இடையில் காற்று வீசியது. நிழல்கள் நீண்டிருந்தன. ஒரு காட்டுப்பூனை புதர்களுக்கிடையில் பதுங்கி மறைந்தது. இந்த அமைதியில் ஓர் ஜீவஇயக்கம் இருந்தது. அந்த ஜீவ இயக்கம் கவனச்சிதறலாக இல்லை. ஒரு குறிப்பிட்ட கவனநிலையாக அது இல்லாததால் அதிலிருந்து கவனச்சிதறலும் ஏற்படவில்லை. முக்கியமான குறிப்பிட்ட ஆர்வம் மாறும்போதுதான் கவனச்சிதறல் ஏற்படுகிறது. ஆனால் இந்த அமைதியில் விருப்பம் என்பதே இல்லை. ஆகவே அந்த அமைதியை விட்டு விலகிப் போகும் ஓட்டம் என்பது இல்லை. ஜீவஓட்டம் இந்த அமைதியிலிருந்து விலகவில்லை. அதுவாகவே இருந்தது. அது மரணத்தின், அழிவின் அமைதியல்ல; ஆனால் வாழ்வினுடையது. அதில் போராட்டம் முற்றிலுமாக இல்லை. நம்மில் பலருக்கும் இன்பதுன்ப போராட்டம், செயல்படுவதற்கான உந்துதல் ஆகியவையே வாழும் உணர்வைக் கொடுக்கிறது. அந்த உந்துதல் பறிக்கப்பட்டுவிட்டால் ‘‘நாம்’’ காணாமல் போய் விரைவில் சீர் குலைந்து போவோம். ஆனால் இந்த அமைதியும் அதன் இயக்கமும் எப்போதும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் சிருஷ்டிநிலையாகும், அது ஒரு தொடக்கமில்லாத, அதனால் முடிவுமில்லாத இயக்கம்; அத்துடன் அதற்குத் தொடர்ச்சி என்பதும் இல்லை. இயக்கம் என்பது காலத்தை உள்ளடக்கியது; ஆனால் இங்கு காலம் என்பது இல்லை. மிகுதி - குறைவு, அருகில்-தொலைவில், நேற்று-நாளை என்பதுதான் காலம். ஆனால் இந்த அமைதியில் எல்லாவித ஒப்பிடுதலும் இல்லாமல் போயிற்று. அது முடிவுற்று மறுபடியும் தொடங்கும் அமைதி அல்ல; அதில் திரும்ப நிகழ்வது என்பது இல்லை. சூழ்ச்சியான மனத்தின் தந்திரங்கள் முழுவதுமாக இல்லை.

---

**‘அமைதி’ என்ற சொல் அமைதியாகாது. சொற்கள் இல்லையென்றால் மனத்தால் செயல்பட முடியாது.**

---

இந்த அமைதி மனதினால் உருவாக்கப் பட்ட மாயையானால், மனத்திற்கு அத்துடன் ஒரு தொடர்பு இருந்திருக்கும். மனம் அதை மறுத்திருக்கும், அல்லது பற்றிக்கொண்டிருக்கும். காரண காரியம் கண்டிருக்கும் அல்லது மென்மையான திருப்தியுடன் அதனுடன் ஒன்று பட்டிருக்கும். ஆனால் மனத்திற்கு இந்த அமைதியுடன் எந்தத் தொடர்பும் இல்லாததால் ஏற்கவோ மறுக்கவோ முடியவில்லை. மனம் தானே கற்பனையில் தோற்றுவித்த அதன் மனபிம்பங்களில் அதாவது அதன் உள்ளடங்கிய பொருள்களின் மீதுதான் செயல்பட முடியும். அதிலிருந்து தோன்றாத பொருள்களுடன் அதற்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்த அமைதி மனத்தை ஒட்டியதல்ல. ஆகவே மனம் அதை வளர்க்கவோ, அத்துடன் ஒன்றுபடுத்திக்கொள்ளவோ முடியாது. இந்த அமைதியின் பரிமாணத்தை வார்த்தைகளால் அளவிடமுடியாது.

Commentaries on Living
First Series, Chapter 24

\- - -

### *ஒன்று சேர்ந்து செல்லும் ஓர் பயணம்*

நாம் ஒன்றாக ஒரு பயணம் மேற்கொண்டு எவ்வித குறிக்கோளும் நோக்கமும் இல்லாமல், எதையும் நாடாமல் ஒரு யாத்திரை சென்றோமானால் ஒருவேளை நாம் திரும்பி வரும்போது நம்மை அறியாமல் நம்முடைய இதயங்கள் மாற்றமடைந்திருப்பதைக் காணலாம். இந்த வகையான பயணம் செய்வது அவசியம் என நினைக்கிறேன். எந்தவித எண்ணமோ, நோக்கமோ, உந்துதலோ, குறிக்கோளோ ஏதோ ஒன்றுக்காகப் பிரயத்தனத்தை உள்ளடக்கி இருக்கிறது – அது மேல் மன அல்லது ஆழ்மன உணர்வாக ஒன்றை அடையும் அல்லது சாதிக்கும் பிரயத்தனமாக இருக்கக்கூடும். இவை எதுவுமே இல்லாத வகையில் நாம் பயணத்தை ஒன்றாக மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட பயணத்தை நாம் மேற்கொண்டால் செல்லும் வழியில் இருப்பதை கூர்ந்து நோக்கும் விழிப்புணர்வு இருந்தால், ஒருவேளை நாம் திரும்பும் போது எல்லா புனிதப்பயணிகளைப் போல் இதயத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். மனத்தை வெறும் கருத்துக்களால் ழ்கடிப்பதை விட இந்தப் பயணம் முக்கியமானது என்று நான் கருதுகிறேன். ஏனெனில் கருத்துக்கள் மனிதனை அடிப்படையாக மாற்றுவதே இல்லை. நம்பிக்கைகள், கருத்துக்கள், பாதிப்புக்கள் மனதை மேலோட்டமாக ஒரு எண்ணக்கூட்டில் ழ்கச் செய்யலாம். ஆனால் நாம் எவ்வித நோக்கமுமின்றி ஒரு பயணத்தை மேற்கொண்டு அத்துடன் வாழ்க்கையின் அசாதாரணமான பரந்த தன்மையையும், அழகையும் எளிமையாக நோக்குவோமானால் அவ்வாறு நோக்குவதிலிருந்து, சகம் சார்ந்த, சூழல் சார்ந்ததாக மட்டுமின்றி கொடுப்பவரும், ஏற்பவரும் இல்லாத ஓர் பேரன்பு தோன்றக்கூடும். ஆனால் அந்த அன்பு எல்லாத் தேவைகளிலிருந்தும் நீங்கிய ஒரு சாஸ்வதமான ஜீவநிலையாகும். ஆகவே, சேர்ந்து செல்லும் இந்தப் பயணத்தில் அன்றாட வாழ்வின் சலிப்பு, விரக்தி, வெறுமை, மனச்சோர்வு ஆகியவற்றைக் காட்டிலும் அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று நம்முள் உதயமாகும்.

The Collected Works, Vol XI

\- - -

### *நாம் நமது வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கிறோமா?*

நம்முடைய வாழ்க்கையை நாம் வீணாக்கிக் கொண்டிருக்கிறோமா? ‘‘வீணாக்குதல்’’ என்ற அந்தச் சொல்லுக்கு நம்முடைய சக்தியை பல வழிகளில் விரயம் செய்தல் என்பதாகப் பொருள் கொள்வோம்; நிபுணத்துவம் வாய்ந்த பணிகளில் நம்முடைய சக்தியை விரயம் செய்கிறோம். நாம் நம்முடைய பரந்த வாழ்க்கையை வீணாக்குகிறோமா? நீங்கள் பணக்காரராக இருந்தால் ‘ஆம். நான் ஏராளமாகப் பணம் சேர்த்திருக்கிறேன். அது மிகுந்த இன்பம் தருவதாக இருந்து வருகிறது’

என்று நீங்கள் சொல்லக்கூடும். அல்லது உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட திறன் இருந்தால் அதுவே சமய வாழ்வுக்குத் தடங்கலாக அமைந்துவிடும். திறன் என்பது ஒரு வரப்பிரசாதம், ஒரு ஆற்றல், ஒரு குறிப்பிட்ட துறைக்கான ஆற்றல். அதாவது நிபுணத்துவம் என்று பொருள் படும். ஒரு குறிப்பிட்ட நிபுணத்துவம் என்பது ஒரு சிதைந்த செய்முறையாகும். ஆகவே உங்கள் வாழ்க்கையை வீணாக்குகிறீர்களா என்று நீங்கள் கேட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் பணக்காரராக இருக்கலாம், உங்களிடம் பலவித ஆற்றல்களும் இருக்கலாம்; நீங்கள் ஒரு நிபுணராக இருக்கலாம்; பெரும் விஞ்ஞானியாக இருக்கலாம்; அல்லது பெரும் தொழிலதிபராக இருக்கலாம். ஆனால் வாழ்க்கையின் முடிவில் இவை எல்லாமே வீண்தானா? எல்லாவித வேதனை, துக்கம், பெருங் கலக்கம், பாதுகாப்பின்மை, மனிதன் சேகரித்த அறிவுபூர்வமில்லாத கற்பனை யான மாயைகள், அவனுடைய கடவுள் கள், முனிவர்கள் - எல்லாமே வீண் தானா? உங்களிடம் அதிகாரம் இருக்க லாம், பதவி இருக்கலாம், ஆனால் இறுதியில் என்ன இருக்கிறது? இது நீங்களே கேட்டுக்கொள்ளவேண்டிய ஆழமான கேள்வி. இன்னொருவர் உங் களுக்காக இந்தக் கேள்விக்கு விடை யளிக்க முடியாது.

From "That Benediction is where you are"

## புத்தக வெளியீடு

*கிருஷ்ணர்த்தியின் நாளேடுகள்* என்ற புத்தகம் நவம்பர் மாத இறுதி யில் வெளியிடப்படும். திருமதி. பிரேமா ஸ்ரீனிவாசன் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

இப்புத்தகத்தின் விலை ரூ. 65/-. இது ஒரு நர்மதா பதிப்பக வெளியீடு.

முகவரி: 10, நாநா தெரு, முதல் மாடி, பாண்டி பஜார், தி.நகர், சென்னை - 17.

✱✱✱

'Krishnamurti for the Young' என்ற தலைப்பின்கீழ் ன்று புத்தகங்கள் வசந்தவிஹாரில் வெளியிடப் பட்டது.எளிமையான ஆங்கிலத்தில் கிருஷ்ணர்த்தி பள்ளி மாணவர்களு டன் உரையாடும் இப்புத்தகத்தின் விலை ரூ. 60. ன்று புத்தகங்களின் விலை ரூ. 180. கல்வி நிறுவனங் களுக்கு 25% குறைவாகத் தரப்படும்.

## கிருஷ்ணர்த்தி ஃபவுண்டேஷன் இந்தியா, வசந்த விஹார் வருடாந்திரக் கூட்டம் 2005

கிருஷ்ணர்த்தி ஃபவுண்டேஷன் இந்தியாவின் வருடாந்திரக் கூட்டம் வழக்கமாக அதனுடைய கல்வி நிலையங்களின் ஏதாவது ஒன்றின் வளாகத்தில் நடைபெறும். ஆனால் இந்த முறை வசந்த விஹாரில் நடைபெற உள்ளது.

கடந்தமுறையாக 1997 ஆம் ஆண்டு வசந்த விஹாரில் இந்த வருடாந்திரக்கூட்டம் நடை பெற்றது. ஜே. கிருஷ்ணர்த்தி அவர்களின் இல்லமாக இருந்த வசந்த விஹாருடன் உங்களது தொடர்பைப் புதுப்பித்துக் கொள்வ தற்கு உங்களுக்கு இது ஒரு வாய்ப்பு.

இந்தக்கூட்டம் ஜனவரி 21ம் தேதி யிலிருந்து 24ம்தேதி வரை நடக்கும். சொற்பொழிவுகள், கலந்துரை யாடல்கள், கேள்வி-பதில் கூட்டங் கள், ஒலி-ஒளி நாடாக்கள் காணுதல், மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் இந்த நான்குநாள் கூட்டத்தில் இடம் பெறும்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் ஆங்கில மொழியில் இருக்கும். இடப்பற்றாக் குறை காரணமாக இந்த கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு அருகில் இருக்கும் பிரம்ம ஞான சபையின் வளாகத்தில் தங்கும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கலந்துகொள்வதற்கான கட்டணம், தங்கும் வசதி குறித்த விபரம், பதிவு செய்து கொள்ளவேண்டிய இறுதி நாள் போன்ற விபரங்கள் அடங்கிய சிறு பிரசுரத்தைப் பெற கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

***கூட்டப் பொறுப்பாளர்,***
***கிருஷ்ணர்த்தி ஃபவுண்டேஷன் இந்தியா, வசந்த விஹார்,***
***124 கிரீன்வேஸ் சாலை, சென்னை - 28***
***ஈமெயில்: kfihq@md2.vsnl.net.in***

***இறுதி நாள் : 20 டிசம்பர், 2004***

இச்சிற்றிதழ் பிப்ரவரி, ஜுன், அக்டோபர் மாதங்களில் இலவசமாக வெளியிடப்படும்.

PERIODICAL

If you do not read Tamil, kindly pass this Newsletter on to your friends.

KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124, 126 (Old 64/65), Greenways Road, Chennai - 600 028.
Tel: 24937803 / 24937596.
E-mail: kfihq@md2.vsnl.net.in Website : www.kfionline.org
Website on the teachings of J.Krishnamurti: www.jkrishnamurti.org

*Published by G. Rajeev on behalf of the Krishnamurti Foundation India.*
*Printed by N. Subramanian at Sudarsan Graphics, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 17. Editor: K. Krishnamurthy.*

## மனித வாழ்க்கையின் நோக்கம்

கேள்வியாளர்:- மனித வாழ்வின் லகாரணம் அல்லது நோக்கம் என்ன?

கிருஷ்ணர்த்தி:- எந்த நோக்கம் பற்றியாவது உங்களுக்குத் தெரியுமா? நாம் வாழ்கிற இந்த வாழ்க்கை முறையில் எந்தவித அர்த்தமோ குறிக்கோளோ இல்லை. நாம் ஒரு குறிக்கோளைத் தோற்றுவிக்கலாம்; குற்றமற்ற தன்மை, ஞானம் அடைதல், உச்சகட்ட நுண்ணுணர்வை அடைவது என்று குறிக்கோள்களைத் தோற்றுவிக்கலாம். முடிவில்லாத கோட்பாடுகளை கண்டுபிடிக்கலாம். இந்தக் கோட்பாடுகளில் நாம் சிக்கிக்கொண்டு அவற்றை நம் பிரச்சனைகளாக்கிக் கொள்கிறோம். சிறிது பணம் சம்பாதிப்பதும், முட்டாள்தனமான வாழ்க்கை நடத்துவதும் தவிர, நம்முடைய வாழ்க்கையில் எந்த ஒரு அர்த்தமோ, பயனோ இல்லை. இவற்றையெல்லாம் வெறும் கருத்தாக இல்லாமல் உண்மையாகவே ஒருவர் தனக்குள் காணலாம். நம்முன் இருக்கும் முடிவில்லாத போராட்டம், பயனையோ அல்லது அர்த்தத்தையோ தேடுவது, ஞானத்தைத் தேடுவது, உலகெங்கும் பயணம் செய்வது குறிப்பாக இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் - ஒரு தியான முறையைக் கற்பது போன்றவற்றை நமக்குள்ளே காணலாம். நீங்கள் ஆயிரம் அர்த்தங்களைக் கண்டுபிடிக்கலாம்; ஆனால் நீங்கள் இமயமலைக்கோ, துறவு மடத்திற்கோ, இன்னொரு அடிமை முகாமை போன்று இருக்கும் ஆஸ்ரமத்திற்கோ போக வேண்டியதில்லை. ஏனெனில் எல்லாமே உங்களிடம் இருக்கிறது. நீங்கள் எவ்வாறு நோக்குவது என்று தெரிந்துகொண்டால், உன்னதமானது, அளவிடற்கரியது, உங்களிடமே இருக்கிறது. அது இருக்கிறது என்று யூகிக்காதீர்கள். இது நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ளும் முட்டாள்தன மான தந்திரங்களில் ஒன்று; அதாவது நாம் தான் கடவுள், நாம்தான் அந்த ‘களங்கமற்ற தன்மை’ என்று பலவிதமான சிறுபிள்ளைத்தனமான செயல்களின்லம் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்கிறோம். மாயையின் லம் அளவிற்குட்பட்டதன்லம் இந்த வாழ்க்கைமுறையின்லம் தான் அளவிடற்கரிய ஒன்றை நீங்கள் காண விழைகிறீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் வாழ்க்கையை ஆழ்ந்து கவனிப்பதில் தான் முதலில் தொடங்கவேண்டும். அங்குதான் எப்படி ‘பார்ப்பது’ என்பதை நீங்கள் கண்டுபிடிக்கமுடியும்.

Beyond Violence

## பரந்த கண்ணோட்டம்

அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகள் எந்த பிரச்சனையானாலும் அவற்றைத் தீர்ப்பதற்கு, முதலில் பரந்த பிரச்சனைகளைக் கவனித்துவிட்டு பிறகு அதன் உட்பிரிவுகளுக்கு வரவேண்டும். இதை நாம் தொடக்கத்திலேயே தெளிவாகக் காண வேண்டுமென நினைக்கிறேன். சிறந்த ஓவியன், சிறந்த கவிஞன் என்பவன் முழுமையைப் பார்ப்பவன். அவன் விண்ணையும், நீலவண்ண வானத்தையும், ஒளிரும் சூரியன் மறையும் காட்சியையும், மரத்தையும் விரைந்து பறக்கின்ற பறவையையும் - இவை அனைத்தையும் நொடிப்பொழுதில் *முழுவதுமாகக்* காண்கிறான். கலைஞனுக்கும், கவிஞனுக்கும் இந்த பரந்த உன்னதமான பூமியின் எழிலுடன் உடனடியான நேரடியான தொடர்பு ஏற்படுகிறது. பின்னர் அவன் ஓவியம் தீட்டத் தொடங்குகிறான். எழுதத் தொடங்குகிறான். அல்லது சிற்பம் செதுக்கத் தொடங்குகிறான். முழுமையிலிருந்து பகுதிகளுக்கு வருகிறான். நீங்களும் நானும் அவ்வாறு செய்வோமானால் நம்முடைய பிரச்சனைகளை அவை எவ்வளவு அசாதாரணமானதாக, முரண்பட்டதாக, கலக்கமுண்டாக்குவதாக இருந்தாலும், சுதந்திரமாகவும், விவேகத்துடனும், மிகுந்த ஆழத்துடனும், உணர்வுடனும் அணுக முடியும். இது ஏதோ கற்பனையால் உருவாக்கப்பட்ட வார்த்தை ஜாலம் அல்ல. உண்மையில் அது அப்படிப்பட்டது தான். அதைத்தான் இப்பொழுதும், வருகிற காலத்திலும் நாம் ஒன்றாகக் கூடும்போது நான் பேச விரும்புகிறேன். எவ்வளவுதான் நெருக்குவதாகவும் உடனடியானதாகவும் கலக்கட்டுவதாகவும் இருப்பினும் விவரப்பிரிவுகளால் உந்தப்படாமல் நாம் முழுமையைப் பற்ற வேண்டும். அங்குதான் புரட்சி தொடங்குகிறது என்று நான் நினைக்கிறேன்.

The Collected works
Vol XI